# டிசம்பர் – 01 – சனி

**புனித எலிஜியுஸ்**

**“நாமோ அவரது மேய்ச்சலின் மக்கள் நாம் அவர் பேணிக் காக்கும் ஆடுகள்”–திபா 95:7**

## முதல் வாசகம் : திருவெளிப்பாடு 22 : 1 - 7

வானதூதர் வாழ்வு அளிக்கும் தண்ணீர் ஓடிக்கொண்டிருந்த ஓர் ஆற்றை எனக்குக் காட்டினார். அது பளிங்குபோல் ஒளிர்ந்தது. அது கடவுளும் ஆட்டுக்குட்டியும் வீற்றிருந்த அரியணையிலிருந்து புறப்பட்டு, நகரின் தெரு நடுவே பாய்ந்தோடியது. ஆற்றின் இரு மருங்கும் வாழ்வுதரும் மரம் இருந்தன. மாதத்திற்கு ஒருமுறையாக அது ஆண்டுதோறும் பன்னிருமுறை கனிதரும். அதன் இலைகள் மக்களினங்களைக் குணப்படுத்தக் கூடியவை. சாபத்துக்கு உள்ளானது எதுவும் நகரில் இராது. கடவுளும் ஆட்டுக்குட்டியும் வீற்றிருக்கும் அரியணை அங்கு இருக்கும். கடவுளின் பணியாளர்கள் அவரை வழிபடுவார்கள். அவரது முகத்தைக் காண்பார்கள். அவரது பெயர் அவர்களுடைய நெற்றியில் எழுதப்பட்டிருக்கும். இனி இரவே இராது. விளக்கின் ஒளியோ கதிரவனின் ஒளியோ அவர்களுக்குத் தேவைப்படாது. ஏனெனில் கடவுளாகிய ஆண்டவர் அவர்கள் மீது ஒளிவீசுவார் அவர்கள் என்றென்றும் ஆட்சிபுரிவார்கள். பின்னர் அந்த வானதூதர் என்னிடம், ”இவ்வாக்குகள் நம்பத்தக்கவை, உண்மையுள்ளவை. விரைவில் நிகழவேண்டியவற்றைத் தம் பணியாளர்களுக்குக் காட்டுமாறு, இறைவாக்கினரைத் தூண்டியெழுப்பும் கடவுளாகிய ஆண்டவர் தம் வானதூதரை அனுப்பினார். இதோ! நான் விரைவில் வருகிறேன்” என்றார். இந்த நூலில் உள்ள இறைவாக்குகளைக் கடைப்பிடிப்போர் பேறுபெற்றோர்.

**பதில்பாடல் :** மரனாத்தா ஆண்டவராகிய இயேசுவே வாரும்

## நற்செய்தி : லூக்கா 21 : 34 - 36

அக்காலத்தில் இயேசு தம் சீடர்களுக்குக் கூறியது, ”உங்கள் உள்ளங்கள் குடிவெறி, களியாட்டத்தாலும் இவ்வுலக வாழ்க்கைக்குரிய கவலையினாலும் மந்தம் அடையாதவாறும் அந்நாள் திடீரென வந்து ஒரு கண்ணியைப்போல் உங்களைச் சிக்க வைக்காதவாறும் எச்சரிக்கையாய் இருங்கள். மண்ணுலகு எங்கும் குடியிருக்கும் எல்லார்மீதும் அந்நாள் வந்தே தீரும். ஆகையால் நிகழப்போகும் அனைத்திலிருந்தும் தப்புவதற்கும் மானிடமகன் முன்னிலையில் நிற்க வல்லவராவதற்கும் எப்பொழுதும் விழிப்பாயிருந்து மன்றாடுங்கள்” என்றார்.

**தியானம்:** இன்று திருவருகைக் காலத்தின் முதல் சனி. கிறிஸ்து பிறப்புவிழாவிற்கு இன்னமும் 24 நாட்களே மீதியாகவுள்ளன. நாம் பலவித ஆயத்தங்களில் பரபரப்பாக ஈடுபடுகின்றோம். இவ்வேளையில் இன்றைய நற்செய்தி இறைமகன் இயேசுவின் மறு வருகையைக் குறித்து விழிப்பாக இருக்குமாறு எச்சரிக்கை விடுக்கின்றது. இற்றைக்கு 2018 வருடங்களுக்கு முன்னதாக வாக்குப் பண்ணப்பட்ட இரட்சகர் பிறந்துள்ளார். ஆனால் இரட்சகராகப் பிறந்தவரோ தமது மறுவருகைக்காக விழிப்பாயிருந்து மன்றாடுங்கள் என அறைகூவல் விடுப்பதனை நாம் சிந்தனைக்கு எடுப்பது மிக மிக முக்கியம். வரவிருக்கும் கிறிஸ்து பிறப்பு விழாவிற்காக, அல்லது எமது வீடுகளில் ஏதாவது வைபவம் நடைபெறுமாயின் எத்தனையோ ஆயத்தங்களை அக்கறையெடுத்து இரவிரவாக விழித்திருந்து செய்து முடிக்கின்றோம். அது எமது இரத்தத்தோடு ஊறிய மனித இயற்கை. எனினும் கிறிஸ்துவின் மறுவருகைக்கு இன்னமும் எத்தனை நாட்கள் மீதி உள்ளன என நாம் கணக்கிட்டு அக்கறையாக இருக்கின்றோமா? இன்றைய நற்செய்திக்கமைவாக இறைமகன் கிறிஸ்து எம்மை இரவெல்லாம் விழித்திருந்து செபிக்க அழைக்கவில்லை. மாறாக, அவரது மறுவருகைக்காக எம்மை பாவமற்ற நிலையில் இருக்குமாறும், நாம் சத்துருவானவனின் பாவக்கட்டுக்களுக்குள் அகப்படாது விழிப்பாக இருக்குமாறும் எச்சரிக்கை விடுத்து அவர் தூயவராக இருப்பது போன்று எம்மிடமும் தூய்மையான பணி வாழ்வை எதிர்பார்க்கின்றார். எனவே கிறிஸ்து பிறப்புத் திருவிழாவிற்கு ஆயத்தங்கள் மேற்கொள்ளும் திருவருகைக் காலத்தின் முதல் வாரத்திலிருந்தே இயேசு ஆண்டவரின் மறுவருகைக்கென நாம் எம்மைத் தயார் செய்வோம். எவ்வித ஆயத்தங்களை நாம் மேற்கொள்ள வேண்டுமென செபத்தோடு கூடிய எமது மன்றாட்டுக்களை அவரிடம் சமர்ப்பிப்போம். “நாமோ அவரது மேய்ச்சலின் மக்கள், நாம் அவர் பேணிக் காக்கும் ஆடுகள்” என்ற உணர்வோடு எமது ஆன்மாவையும், உள்ளத்தையும் சுத்தப்படுத்தி வழிநடத்த வல்லவரிடம் எம்மையே முற்றுமுழுதாக சரணாகதியாக்குவோம். ஏனெனில் எமது பாவங்களுக்காக கிறிஸ்து மீண்டும் பிறக்கமாட்டார். மாறாக மண்ணுலகில் தாம் மாட்சிமையோடு வரும்போது எம்மை விழிப்பாயிருக்க அழைக்கின்றார்.